சுற்றறிக்கை இலக்கம்: 01/2003

எனது இலக்கம்: எம்/11/15
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11.
2003.09.17

அனைத்து மாவட்ட செயலாளர்கள்
(மேலதிக பதிவாளர் நாயகங்கள்) /
மாவட்டப் பதிவாளர்கள் (பிரதேச செயலாளர்கள்) மற்றும்
காணி மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கு.

**<u>நியமனம் பெற்ற வி.பி.இ பதிவாளர்களை நிரந்தரமாக்குதல்</u>**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்கள் ஆறு மாத கால பயிற்சி தகுதிகாண் காலப்பகுதிக்காகவே நியமிக்கப்படுகிறார்கள். இப்பயிற்சி காலம் முடிவடைந்தவுடன், தாமதமின்றி உரிய உறுதிப்படுத்தல் பரீட்சையை நடாத்தி அவர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

02. உறுதிப்படுத்தல் பரீட்சை நடாத்தப்படுவது குறித்து மாவட்ட செயலாளரினால் முன்கூட்டியே அறிவிக்கப்பட வேண்டும். இப் பரீட்சைக்கான திகதி குறித்து ஒரு மாதத்திற்கு முன்னரே பதிவாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். இந்த பரீட்சையானது மாவட்ட செயலாளரினால் அல்லது மேலதிக பதிவாளர் நாயகத்தினால் நடாத்தப்பட வேண்டும். இப்பரீட்சையில் தேர்ச்சி பெற குறைந்தது 50% புள்ளிகள் பெறுவது அவசியமாகும்.

03. பதிவாளரை நிரந்தரமாக்குவதற்கு முன்னர், அவர் மேற்கொண்ட விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுகள் திருத்தமாகவும், சுத்தமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளதா என்பது குறித்து மாவட்ட செயலாளர் திருப்தியடைய வேண்டும். அத்துடன், மாதாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் உரிய தினங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும், அவர் தனது கடமைகளைச் செய்வதற்கு எவ்வித தடைகளும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சை நடாத்தப்பட்ட ஒரு வார காலத்திற்குள் அதன் அறிக்கையை இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

04. பதிவாளரை நிரந்தரமாக்குவதற்கான பரிந்துரை விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு மாவட்ட செயலாளர் அல்லது மேலதிக பதிவாளர் நாயகம் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்து பதிவாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும்.

05. இச்சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு உங்கள் அலுவலக உத்தியோகத்தர்களுக்குப் பணிப்புரை வழங்குவதுடன், இது குறித்து நீங்கள் தனிப்பட்ட ரீதியில் அவதானம் செலுத்த வேண்டும்.

06. இச்சுற்றறிக்கை கிடைத்தமையை உறுதிப்படுத்தவும்.

(ஒப்பம்)

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர் - தகவலுக்காக

   உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
2. அனைத்து பிரதேச செயலாளர்கள். - தக ம மே நட
3. அனைத்து பிராந்தியங்களுக்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகங்கள். - தக ம மே நட
4. அனைத்து காணிப் பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள். - தக ம மே நட
5. கௌரவ செயலாளர் - அகில இலங்கை வி.பி.இ பதிவாளர்கள் சங்கம்.